நல்லூர் கிளை நூலகம்

## சமாதானத்துககாக ஐ. தே. க. போலிக்குரல்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 24 இதழ் 159
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 07-04-1995

## வாசு சாட்டை!

(கொழும்பு)

சமாதானத்துக்காக ஐக்கிய தேசியக்கட்சியினர் போலிக் குரல் எழுப்புகின்றனர்.

சிங்கள மககள் அரசாங்கத்தை யுத்தத்துக்கு ஆயத்தமாக வேண்டாம் என்று கூறும் அதேவேளையில் விடுதலைப் புலிகளையும் யுத்தம் செய்ய முற்படவேண்டாம் என தமிழ் மக்கள் கேட்டுக்

(4ம பக்கம் பார்க்க)

## 'பிரபா'வுடன் பேசியே தீர்வுகாண வேண்டும்

ஐ. தே. க. எ. பி.

(கொழும்பு]

பிரபாகரனுடன் பேசாமல் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாது. எமது தேசியக கொடியை யாழ்ப்பாணத்தில் பறக்கவிடமுடியாத நிலையில் நாம் இருக்கிறோம். வடக்கிற்கு பொருளாதாரத் தடையை நீக்குவதால் மட்டுமே இனப்பிரச்னையைத் தீர்க்கவும் முடியாது.

குருநாகல் மாவட்ட ஐ. தே. க. உறுப்பினர் காமினி ஜய

(2ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு காரணங்கள் நிமித்தம் கண்டியில்

# மேதினக் கூட்டத்தை நடத்த ஐ.தே.க.வுக்குத் தடை விதிப்பு!

## பேரணிக்கும் பொலிஸார் அனுமதி மறுப்பு!!

[கொழும்பு]

கண்டியில் மேதினக் கூட்டத்தையும், பேரணியையும் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொலிஸார் தடைவிதித்துள்ளனர். பாதுகாப்பு காரணங்களைக் கூறி ஐ. தே. க. வுக்கு இந்தத் தடைஉத்தரவு விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 வருடங்களாக ஆட்சியிலிருந்த ஐ. தே. க. அதன் மேதினக் கூட்டங்களையும. பேரணிகளையும் கொழும்பிலேயே நடாத்தி வந்தது.

ஆனல் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பதவியிழந்த ஐ. தே. க. எதிர்க் கட்சியின் அந்தஸ்தைப் பெற்றது.

எதிர்க்கட்சிக்கு வந்ததும் ஐ. தே. க. அதன் முதலாவது மேதினக் கூட்டதையும.

(4ம் பக்கம் பார்க்க)

## காலிமுகத்திடலில் ஐ. தே. க. மேதினத்தை நடத்தலாம்

அமைச்சர் ரத்வத்த பதில்

(கொழும்பு)

ஐ. தே க. அதன மேதினக் கூட்டத்தையும் பேரணியையும் கொழும்பு காலிமுகத்திடலில் நடத்தலாம்

மேதின ஊர்வலங்களைக் கடந்த காலங்களில் நடத்துவதற்கு அனுமதி வழங்கியதைப் போல இம்முறையும் நடத்துவதற்கு பொலிசார் அனுமதி வழங்குவர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று நாடாளுமன்றத்தில் உரைநிகழ்த்தியபோது இவ்வாறு கூறினர்.

(4-ம்பக்கம் பார்க்க)

## மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் இதுவரை மீறப்படவில்லை

ரத்வத்த கூறுகிறர்

(கொழும்பு)

நாட்டில் ஆங்காங்கே சில சம்பவங்கள் இடம்பெற்ற போதும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் இதுவரை மீறப்படாமல் இருந்து வருகின்றது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்த தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் அவசரகாலநிலை விவாதத்தின்போதே. அவர் மேற்

(4ம் பக்கம்] பார்க்க]

## ஒப்பந்தத்தில் அரசு கவனம் செலுத்தவேண்டும்

(கொழும்பி)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் உரைநிகழ்த்தியபோது கூறினர்.

அவசரகாலநிலை தொடர்பான விவாதத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது: மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை அமுல்செய்வ

(4-ம் பக்கம் பாரக்க)

## புலிகளுடன் பேசிய பிறகே அதிகாரப் பரவலாக்கம்

– அமைச்சர் பீரிஸ்

[கொழும்பு]

அரசியலமைப்பு மாற்றத்தின்போது அதிகாரப் பரவலாக்கல் குறித்த விடயங்கள் விடுதலைப் புலிகளுடன் நடாத்தப்படவுள்ள பேச்சுக்களையடுத்தே அரசாங்கம் தீர்மானிக்கும் என நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சரும் பிரதிநிதி அமைச்சருமான ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது: நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தையை நடாத்துவது குறித்து விடுதலைப் புலிகளின் பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். க இ

## பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு உலக திருச்சபை மன்றம் அரசுபுலிகளிடம்கோரிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உலகத்திருச்சபைகள் மன்றம் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

முன்நிபந்தனைகள் எதனையும் விதிக்காது சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்

(4-ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி தேர்தல்களை 3 மாதம் பின்போட அரசு முடிவு

[கொழும்பு]

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மூன்று மாதங்களுக்குப் பின்போடப்பட்டுள்ளதாக 'லங்காதீப' சிங்களப் பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் நடத்துவற்கு அரசு முன்னர் தீர்மானித்திருந்தது.

அரசின் இந்த முடிவு இப்போது மூன்று மாதங்களுக்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளும் தமிழ்மக்களும் அரசு அமைப்பதில் உறுதி

[கொழும்பு)

விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் தங்களுடைய அரசு ஒன்றை அமைப்பதில் உறுதியாக உள்ளனர் யுத்தத்தில் அவர்களை வெற்றி கொள்வது என்பது முடியாதவிடயம்என 'ராவய' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள நிலைமைகளைநேரடியாக அவதானித்த அப்பத்திரிகையின் செய்தியாளர்கள் எழுதிய கட்டுரை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்

(4ம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் நடுவர் சங்கத்தைஅமைக்கும் முகமாக நாளை 08ம்திகதி நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் இதுவரை நடுவர்களாகக் கலந்துகொண்டவர்கள் தவறாது வருகை தரும் வண்ணம் யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கம் கேட்டுக் கொள்கிறது. இக் கூட்டம் அரசியல்துறை யாழ் மாவட்டச்செயலகம் கோணடாவிலில் காலை 10மணிக்கு நடைபெறும், ரி

## பட்டமளிப்பு விழா

(பண்டத்தரிப்பு)

வட-இலங்கை ஹோமியோபதி சங்கமும், வட-இலங்கை அக்குபஞ்சர்சங்கமும்இணைந்து நடாததும் ஹோமியோபதி மருத்துவத்தின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 240-வது பிறந்த தின ஞாபகார்த்த விழாவும், 3-வது பட்டமளிப்பு விழாவும் எதிர் வரும் 9ம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபததில் நடைபெறவுள்ளது. -72

## தீவுப் பகுதியில் படையினர் ரோந்து

(ஆனைப்பந்தி]

தீவகப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவ கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிகாட்டுவான்துறை முகாமிலிருந்து கடற்படையினரும் ஊர்காவற்றுறை முகாமிலிருந்து இராணுவத்தினரும் புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான் பகுதிகளுக்கு ஒரு நாளில் ஐந்து தடவைக்கு மேல் ரோந்து சுற்றி வருகின்றனர்.

இந்த ரோந்து அதிகரிப்பானது இப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை உண்டுபண்ணியுள்ளதாகவும் அங்கிருந்து வந்தோர் மூலம் அறிய முடிகின்றது. ]101-சி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினர் தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன்ஆலயத்தில் நடாத்தி வரும் வாரா ந்தகருத்தரங்கில் இன்று 7ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஓதுவார் சி. தில்லைமணி பண்ணிசை வழங்க இருக்கின்றார் அறிமுக உரையை ஞானபண்டித இசையரசு சங்கீத பூஷணம் செ. குமாரசாமி நிகழ்த்துகிறார். ம

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா இன்று 07ம் திகதி வெள்ளிக்கிழமை மு-ப 1-00 மணிக்கு கல்லூரிகுமாரசுவாமி மண்டபத்தில்அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் பிரதமவிருந்தினராக அரச அதிபர் க. பொன்னம்பலமும் சிறப்புவிருந்தினராக தமிழீழக் கல்விக்கழகபொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும் கலந்து கொள்வார்கள்

0 0

(கொழும்பு)

நல்லை. திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று 7ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8மணியளவில் நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஷையும், 14வது ஆண்டு ஆதினவிழாவும் நடைபெறும். ம

அமரர் சிவானந்தன்

# எல்லோருக்கும் வழிகாட்டி வாழ்ந்து காட்டியவர்!

இளம்பரிதி அஞ்சலியுரை

(யாழ்ப்பாணம்)

''தமிழீழத்தின் கல்விக் கொள்கையை நன்கு புரிந்து அதற்கு அமைவாகச் செயலாற்றி வந்தவர் அமரர் சிவானந்தன். எல்லோரும் சமத்துவமாக வாழ வேண்டும் என்கின்ற பரந்துபட்ட நோக்கோடு தானும் வாழ்ந்து காட்டி எல்லோருக்கும் வழிகாட்டியாக வாழ்ந்தவர் அவர்'' யாழ். இந்துக்கல்லூரியில் நேற்று நடைபெற்ற முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அமரர் இராமுப்பிள்ளை சிவானந்தனின் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. செ. இளம்பரிதி தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட் திரு பிரான்சிஸ் யோசேப் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. இளம்பரிதி தொடர்ந்து உரையாற்றுகையில்; பல்வேறுதுறைகளிலும் ஆற்றல்மிக்க அமரர் சிவானந்தன் தமிழீழக் கல்வி மேம்பாட்டு நிறுவனத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வந்தார். மிக்க தேசப்பற்றுள்ள இவர் எமது மக்கள் கல்வியில் முன்னேற்றம் காணவேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்துடன் செயலாற்றி வந்தார்.

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. கந்தசாமி அமரர் சிவானந்தனின் ''கண்டறியாதது'' நூலை வெளியிட்டு வைக்க யாழ். இந்துக்கல்லூரி அதிபர் பஞ்சலிங்கம் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் உட்பட பல கல்விமான்கள் உரையாற்றினார்கள்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன், வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி ஆகியோர் அனுப்பி வைத்த செய்தி இக்கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

162-ரி

## 'அ' 'உ' அட்டைக்கு சீனி, மைசூர் பருப்பு

(ஆனைப்பந்தி)

சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 'அ' 'உ' குடும்ப அட்டைக்கு சீனி, மைசூர் பருப்பு என்பன விநியோகிக்க செயலக புனர்வாழ்வுப் பகுதி தீர்மானித்துள்ளது

சங்கங்கள் இதற்கான பணத்தை புனர்வாழ்வுப் பகுதியில் செலுத்தி வழங்கற் கட்டளையைப் பெற்று 1,2 அங்கத்தவருடைய குடும்பத்திற்கு 3 கிலோ சீனி, 1 கிலோ பருப்பு 3, 4 அங்கத்தவருடைய குடும்பத்திற்கு 4கிலோ சீனி, 2 கிலோ பருப்பு 5ம் அதற்கு மேற்பட்ட அங்கத்தவருடைய குடும்பத்திற்கு 5 கிலோ சீனி, 3 கிலோ பருப்பு என்ற அடிப்படையில் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். -101-சி

பிறப்பு. இறப்பு. திருமண

## பதிவு சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கலாம்

(மானிப்பாய்)

யாழ் பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு இறப்பு கல்யாண சான்றிதழ்களைப் பெறுவதற்கு விணணப்பம் செய்தவர்களுக்கு கடந்த திங்கள் முதல் போட்டோப் பிரதி மூலம்அச்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

இதன் காரணமாக சில தினங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 1954ம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களுடைய பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பங்களும தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

71-ரி


# நிர்மாணி

## நிர்மாண துறைசார் இதழ் மாதாந்த வெளியீடு

விரைவில் வெளிவரவுள்ள நிர்மாண துறை சார்ந்த மாதாந்த சஞ்சிகைக்கு தங்களின் பொறியியல்துறை சார்ந்தஆக்கங்களை அனுப்பி வைக்கவும். இத்துறையில் ஈடுபடுவோர் தமது சேவைகளை விளம்பரப்படுத்த விரும்பின் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்,

முதல் இதழ் வருடப்பிறப்போடு வெளிவரவுள்ளது. இதில் பின்வரும் கட்டுரைகள் அடங்கும்.

★ புனரமைப்பு வேலைகளும் போக்குவரத்து தடைகளும்
★ நிர்மாண துறையும் இன்றைய நிலையும்
★ மேல் செலவுகளும் மதிப்பீடும்
★ கிளிநொச்சி நகர் திட்டமிடல் - நோக்கு
★ 1000 வீட்டுத்திட்டம் - வன்னி மாவட்டம்
★ வேலை மேற்கொள்வோர் பதிவுகள்
★ அபிப்பிராயக் கடிதங்கள்
★ செய்திகள்

உங்கள் பிரதியை உறுதிப்படுத்துவதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்

வெளியிடுவோர்:

பொறியியல்துறை
தமிழீழ நிர்வாக சேவை
நடுவப்பணியகம்
தமிழீழம்

(எ4862)



## காணி விற்பனைக்கு

நாவற்குழி கண்டி வீதியில் 45 பரப்பு நெற் காணியுடன் கல் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்;- ஆ. ஆனந்தராசா, 414/4, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [சி-1440[



## உலக சுற்றுடல் தினப் போட்டிகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழற் பாதுகாப்பு பகுதி உலக சுற்றுடல் தினத்தை முன்னிட்டு சிறுகதை, கவிதை, கட்டுரை, கருத்துப் படம் போன்ற போட்டிகளை நடாத்தவுள்ளது. இப் போட்டிகளின் ஆக்கங்கள் யாவும் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை எடுத்துக் காட்டுவனவாக அமைதல் வேண்டும்.

★ சிறுகதை ★ கட்டுரை
★ கவிதை ★ கருத்துப் படம்

போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை.

★ வட தமிழீழ மக்கள் அனைவரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளலாம்.
★ ஆக்கங்கள் யாவும் சூழலின் பாதுகாப்பினை சித்தரிக்கும் வண்ணம் அமைய வேண்டும்
★ ஆக்கங்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
★ சிறுகதைகள் யாவும் 1500 சொற்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
★ கட்டுரைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
★ கருத்துப் படங்கள், ஓவியங்கள், சூழல் பாதுகாப்பினை சித்தரிப்பதாகவோ பொருண்மிய வளர்ச்சியினை மேம்படுத்துவதாகவோ இருத்தல் வேண்டும்.
★ படைப்பாளரின் பெயர், முகவரி, என்பன தனித் தாளில் எழுதப்படுவதுடன் படைப்பாளர் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் மே 05-ம் திகதிக்குப் பிந்தாமல் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மைச் செயலகத்திற்கு அனுப்புதல் வேண்டும் பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
★ நடுவர்களின் தீர்ப்பே முடிவானதும் இறுதியானதுமாகும்.
★ போட்டி முடிவுகள் யாவும் 01-06-1995 தினசரி பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டும் போட்டியாளர்களுககான பரிசில்கள் யாவும் யூன் 05 ம் திகதி நடைபெறும் உலக சுற்றுடல் தின விழாவின்போது வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் ''உலக சுற்றுடல் தினம்'' யூன் 05 என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்பட்டு,

-சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
முதன்மைச் செயலகம், தாவடி

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ஏ-4861)

### மணிவாக்கு

இருபது வயதில் மனிதனுககு அமையும் முகவெட்டு இயற்கை அளிக்கும் காணிக்கை; முப்பது வயதுக்குப் பிறகு ஏற்படும் முகத்தோற்றம் வாழ்க்கையின் சோதனைகள் தந்த வெகுமானம்; ஐம்பது வயதுக்குப் பிறகு ஏற்படுகிறதே முகத்தோற்றம் அது தான் மனிதனின் சொந்தமான சம்பாத்தியம்.

- அஷ்டாவக்ரர்

## நமது நோக்கு

### வாய்ச்சொல் அருளீர்!

''புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்குச் செலவிடும் நிதி எங்களது நிதி அல்ல. அனைத்தும் வெளிநாட்டு உதவிகளேயாகும்!'' என அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா 'லக்பிம' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? வாக்குறுதிகளை அள்ளி வீசி வாய்ப்பந்தல் போடும் அரசிடம் நிதி இல்லை.

வெளிநாட்டு நிதியை நம்பிக் கொண்டுதான், ஏட்டளவில் உள்ள திட்டங்களைக் காட்டி மகளைக் கருணை மழையில் நனைய வைக்கின்றது.

''மின்சாரம் வரும்; வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன; வந்து கொண்டிருக்கின்றது!" என்றெல்லாம் அரசுவெளியிட்ட அறிக்கைகள், வானொலிச் செய்திகள் எல்லாம் போலியானவையா எனக் கேட்கத் தோன்றுகிறது. அமைச்சரின் பேட்டிக்குப் பின்!

வரவுசெலவுத்திட்டம் வெளியானபோது, இராணுவத்திற்கென நிதி ஒதுக்கிய அரசு, வடகிழக்குப் புனர்நிர்மாணப் பணிகளுக்கென நிதி ஒதுக்காததையிட்டுச் சந்தேகம் தோன்றியது.

ஆனல் - செய்திகளின் சுவையிலும், வாக்குறுதிகளின் வனப்பிலும் மக்கள் சிலர் ஏமாந்து, ஆனந்தக்கடலில் மூழ்கித் திளைத்ததும் பழங்கதையாகிவிட்டது.

பொதுப்பணிகள் எப்படி நிறைவேற்றலாம் என்பதற்குப் பாரதியாரும் ஆலோசனை வழங்கத் தவறவில்லை.

''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!'' என்ற நிதிதிரட்டும் அவரது ஆலோசனையை ஏற்றுப் பிறநாட்டு உதவிக்காக அரசு கையேந்தி நிற்பது தெளிவாகத் தெரிகிறது.

ஏற்கனவே வழங்கிய நிதி உதவிகள் எப்படியெல்லாம் பாழாகின என்ற சங்கதிகள் ஆட்சி மாற்றத்திற்குப் பின் வெளிவருகின்றன.

இந்தவேளையில் தான் - பாரதியார் ஆலோசனைப் பாடலின் அடுத்துவரும் வரிகளை அரசு அச்சொட்டாகப் பின்பற்றுவதும் தெரிகிறது!

''அதுவும் மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!'' என்பதற்கிணங்க, மக்களை மகிழ்ச்சிப்படுத்த மேலும் வாக்குறுதிகள் வந்த வண்ணமுள்ளன.

உள்ள நிலையை அமைச்சரே புட்டுக்காட்டிய பின் வாக்குறுதிகளை - வாய்ச் சொல்லை நம்ப மக்கள் தயாராக இல்லை!

★ தமிழகத்திலிருந்து

## தமிழ் அகதிகளை அனுப்பும் வரை புலிகள் பிரச்னை இருக்கும்

(சென்னை)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் வரை தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் பிரச்னை இருந்து கொண்டேயிருக்கும் என தமிழக அரசு கருதுவதாக 'இந்து" பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுகையில்; தமிழகத்தில் தங்கியுள்ளவர்களை அகதிகளா போராளிகளா எனப் பிரித்தறிவது மிகக் கடினமாகவுள்ளது. இதனல் தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் உடனடியாக திருப்பி அனுப்புமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா பலதடவைகள் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளார்.

எனினும் சில காரணங்களுக்காக மத்திய அரசு இதனை செய்ய முடியாத நிலையில் உள்ளது. தற்போது இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களால் இலங்கையில் ஓரளவு சுமுக நிலை தோன்றியிருப்பதாகவும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புமாறு மத்திய அரசை ஜெயலலிதா வற்புறுத்தியுள்ளாராம். (சி)

### உலக சுகாதார தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடத்தும் உலக சுகாதார தினகொண்டாட்டம் இன்றுபி-ப 2-30 மணியளவில் நாவலர் கலாச்சார மண்டபத்தில் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சுக நல கீதங்கள், கவியரங்கு நாடகம் போன்ற பலநிகழ்வுகள் இவ்விழாவில் நடைபெறவுள்ளது. ரி

## காங்கிரசை சீரமைப்பதற்கு நரசிம்மராவுக்கு அதிகாரம்

### செயற்குழு வழங்கியது

]புதுடில்லி]

அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சி செயற்குழு தலைவர் திரு. பி. வி. நரசிம்ராவிடம் முழு நம்பிக்கை தெரிவித்து கட்சியை சீரமைப்பதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளது

அடுத்த ஆண்டில் நடைபெறும் மக்கள் அவை தேர்தல்களை எதிர்கொள்ளும் வகையில் காங்கிரஸ் செயற்குழு மாநில காங்கிரஸ் கமிட்டியையும் தலைவர் பி. வி. நரசிம்மாவிற்கு திருத்தியமைப்பதற்கு காங்கிரஸ் செயற்குழு முழு அதிகாரம் அளித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன் தினம் நடைபெற்ற இ. காங்கிரஸ் செயற்குழு கூட்டத்திரல் மேற்குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அண்மையில்நடந்து முடிந்த சட்டப் பேரவை தேர்தல்களில் இ. காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு காரணம் கட்சியில் சிலர் முரண்பாடாக குரல் எழுப்பியதும் மத்தியஅரசின் கொள்கைகளும் திட்டங்களும் மக்களுக்கு சரியான முறையில் எடுத்துச் சொல்லாகதுமே யாகும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் திரு.பி. வி. நரசிம்மராவ் பேசுகையில் ஒற்றுமையும் கட்டுப்பாடுமே இப்பொழுது எமது கட்சிக்கு முக்கிய தேவையாக இருக்கிறது. என்றும் அண்மையில் இடம் பெற்ற தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு தற்காலிகமானது இந்த தேர்தல் முடிவுகளை படிப்பினையாக எடுத்துக்கொண்டு வருங்காலப் பணிகளுக்கு நாம் தயாராக வேண்டும் என்றும் கூறினர். (ரி)

## மட்டு. மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக் கழகத்தை வந்தாறு மூலையிலிருந்து அம்பாறைககு மாற்றுவதை எதிர்த்து நேற்று முன்தினம் மட்டு. மாவட்ட மாணவர்கள் அனைவரும் தமது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

இப்பல்கலைக்கழக மாற்றம் தொடர்பாக எதிர்ப்பு தெரிவித்து வரும் கிழக்கு பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்தே மேற்படி மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக அண்மையில் கிழக்கில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ரி)

## இராசி பலன்

07-04-1995

வெள்ளிக்கிழமை

**(தமிழுக்கு பங்குனி-24)**

ஸப்தமி முன்னிரவு 7-43 வரை: திருவாதிரை நள்ளிரவு 12-30 வரை. இராகு காலம் காலை 10-33 முதல் 12-08 வரை. சுபவேளை காலை 6-08 முதல் 7-33 வரை.

மேடம்- சத்துரு நாசம், கீர்த்தி, நண்பர்கள் மகிழ்ச்சி.

இடபம்- தன விரயம், தொழில் வேற்றுமை, கண்டனம்.

மிதுனம்- பெற்ரோர் பணிவிடை, முயற்சி பலிதம். பணவரவ,

கடகம்- தொழில் நஷ்டம், கடின வேலை, அலைச்சல்.

சிங்கம்- பயம் தெளிதல், உடல்நலக் குறைவு, காரிய சித்தி.

கன்னி- வீட்டில்சுபகாரியம், நற்செய்தி, வருவாய் அதிகரிப்பு.

துலாம்- குடும்ப இடையூறு, மனச்சஞ்சலம் புத்திரர் கவலை.

விருச்சிகம்- அடிமைப்படல், அகங்காரம். வீண் புகழச்சி.

தனுசு- குழம்பித் தெளிதல், பிதா கவலை, அனுவசியத் தலையீடு,

மகரம்- மனச்சங்கடம், வீண் விவாதம், அகால உணவு.

கும்பம்- கெட்ட செயல், ஆசை நிறைவேருமை, பண முடை.

மீனம்- ஏமாற்றப்படல், வைத்தியச் செலவு, உள்ளக் குமுறல்.

— ஜோஸ்யர்

### வெள்ளி விருந்து

### எது வழிபாடு?

சைவசமயத்தை வகுத்த திருமூலர் உள் வழிபாட்டைய வழிபாடு என்கிருர். புறவழிபாடு பாசிக்குளத்தில் விழுந்த கல்லின் செயற்பாட்டை ஒக்கும் என விளக்கமாகக் கூறியுள்ளார். பாசி படர்ந்திருக்கும் குளத்தில் ஒரு கல் விழுந்தால் அந்தக் கல் பட்டதும் பாசிப்படலம் பிரிந்துவிடும். அக்கல் கீழே போனதும் பாசிப்படலம் மறுபடியும் ஒன்றுசேர்ந்துவிடும்.

அதுபோலவே புறவழிபாடு முடிந்ததும், மனம் தனது பழைய நிலைக்குச் சென்றுவிடும். வெறும் சடங்குகளிலும் கிரியைகளிலும் முடங்கிக்கிடக்கின்ரேம். மனம் பண்படுவதும். கசிவதும், இரங்குவதும் துர்லபமாகிவிட்டது.

ஆலயத்திற்குச் சென்று, ''எனக்கு இது செய்தால் உனக்குப் பொங்கலிடுவேன்: பூசை வைப்பேன், பாற்குடம் எடுப்பேன்!'' என்று பேரம் பேசுவது வழிபாடாக முடியாது. மும்மலப் பிடியிலிருந்து நாம் விடுபடவேண்டும். இதற்காகவே நமக்குச் சோதனையும் துன்பங்களும் தரப்பட்டுள்ளன. இவற்றை ஏற்கவும் தாங்கவும் சக்தி வேண்டும். இந்தச் சக்தியைத் தருவதே வழிபாடு, திருமந்திரம் காட்டும் வழிபாடு எமக்கு உறுதுணையாகின்றது.

—திருமதி செல்வம் கல்யாணசுந்தரம்

(''அருள்நெறிக் கலசம்'' - சுடர் 3)

### பலதும் பத்தும்

### வெயிலின்போது....

வெயிலின் கொடுமை தாங்காது சிலர் 'கற்பக தரு' தரும் பாலிற் கண் வைக்கிருர்களல்லவா? அதன் சில பக்க விளைவுகளாற் பரிதாப நிலைக்குத் தள்ளப்படக்கூடும்,

இரவிலே எஞ்சியிருக்கும் சோற்றில் நீரை ஊற்றி விட்டு அடுத்த நாள் அந்தப் பழஞ்சோற்று நீரில்......... வெண்காயம், உப்பு, ஊறுகாய் .........வாயூறுகிறதா?

சிலர்......இதன் மருத்துவ தன்மை தெரியாது வெறுப்போடு பார்ப்பதும் சளி பிடிக்கும் எனத் தவருகக் கருதுவதும் உண்டு; உண்மை என்ன தெரியுமே? இதில் உள்ள யீஸ்ட் (Yeast) சளி பிடிப்பைத் தடுக்க உதவும். என இந்திய டாக்டர் அசீம் தாஸ்குப்தா கண்டு பிடித்துள்ளார்.

பழையது எல்லாம் நல்லது என நினைத்துக்கொண்டு பழைய கறிகள். பழுதான உணவுகளிற் பார்வையைச் செலுத்தக்கூடாது ஆனல்...பழஞ்சோற்று நீர் வெயிற்காலத்தில் அரு மருந்து!

— மயூரன்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-04-07

வெள்ளி இரவு

08-02 காலை மஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் அறிமுகமாகுபவை சிரித்திரன் சஞ்சிகையின் தை, மாசி, பங்குனி இதழ், கவிதை சஞ்சிகையின் ஓராண்டு இதழ். அதனையடுத்து சிறுகதை சந்திரா தன பாலசிங்கம் எழுதிய ''வணக்கத்துக்குரியவர்கள்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை ஈழப்பிரியா எழுதிய ''மாவீரர்கள்''

08-25 கணப்பொழுது- சிறு கணணம்மா எழுதிய ''கப்டன் சிறீமதி''

08-30 செய்திகள்

08-40 அரசியல் அரங்கம்- வே. பாலகுமாரன் எழுதிய ''நச்சுவாயுக்களும் நவீன சாமியார்களும்''

08-50 ஏர்முனை நிகழ்ச்சியில் ''பாரம்பரிய இலைமரக் கறிகள் சித்திரம்

1995-04-08

சனி காலை

07-02 மாவீரவணக்கம்

07-15 நீங்கள் கேட்டவை

07-30 செய்திகள்

07-35 பத்திரிகைச் செய்திகள்

07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி மாலை ஒலிபரப்பு

1995-04-07

வெள்ளி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்

05-02 எழுச்சிகீதம்

05-10 புதியவை

05-15 கனநேரக் காவியங்கள்

05-30 மண்ணின் குரல்

05-40 நேயர் கடிதங்கள்

05-45 வெற்றிச்சுவடுகள்

06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்

06-02 நாடகம்

06-15 விளையாட்டுச் செய்திகள்

06 20 என்தெரிவு

06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### தவக்கால நற்சிந்தனை

''ஆண்டவரை நான் கூவி அழைப்பேன், என் எதிரிகளினின்று மீட்படைவேன்'' (சங்.17;3)

மகனின் துயரம் கண்டு துடித்தாள் வியாகுலத் தாய், சிலுவையின் பாதையிலே அவளும் நடந்தாள். சிலுவை அடியிலே துடித்தாள். மடியிலே மகனை உயிரற்ற உடலைச் சுமந்தாள். அந்த அன்னையை வியாகுல அன்னையை இன்று நாம் நினைவு கூருகின்ரேம். அந்த அன்னையின் மூலம் ஆண்டவரிடம் செல்வோம்.

— தா. மைதிலி

தடையெல்லாம் உடைத்திடலாம்
தரிசு நிலமெல்லாம் பயிர் செய்தால்

# லஷ்மன் கதிர்காமர் இந்தோனேஷியா பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்வரும் 23ம் திகதி இந்தோனேஷியாவுக்கு பயணமாகவுள்ளார்.

24ம் திகதிஇந்தோனேஷியா தலைநகர் ஜகார் தாவித்தில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளு முகமாகவே இவர் இந்தேனிஷியா செல்லவுள்ளார். க-இ

# சந்திரிகா அரசு மீது

## பொருளாதார நிபுணர் அதிருப்தி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் அரசாங்கம் மேற்கொள்ளும் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து பொருளாதார நிபுணர்கள் பலத்த கருத்து வேறுபாடுகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளதாவது: ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கம் பணவீக்கத்தை பாதியளவு குறைத்துள்ளது.

ஆனால் நுகர்வோர் பொருட்கள் மீதான விலையை எவ்வளவு காலத்திற்கு இதேநிலையில் வைத்திருக்க முடியும் என்பது குறித்தும் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் ஜனாதிபதி சத்திரிகா தான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றபோது 13 சத வீதமாக இருந்த பண வீக்கத்தை 6 சதவீதமாசக் குறைத்திருப்பதாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. க-இ

# சோனியாவை அரசியலில் ஈடுபடுத்த முயற்சி

[புதுடில்லி]

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விதவை மனைவியான சோனியா காந்தியை அரசியலுக்குக் கொண்டுவரும் முயற்சியில் சிரேஷ்ட அரசியல்வாதிசுள் சிலர் ஈடுபட்டு வருவதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருமதி சோனியா காந்தியை அரசியலுக்குள் ஈடுபடுத்த முன்னரும் பல தடவைகள் முயற்சி மேற்கொள்ளப்பட்டதும் அவற்றை அவர் நிராகரித்ததும் ஏற்கனவே தெரிந்ததே.

இதேவேளையில் இன்னும் 14 மாதங்களுள் இந்தியாவில் பொதுத்தேர்தல் நடாத்தப்படவேண்டும் என அறிவிக்சப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [-க ரி]

# தமிழக ஆளுநருக்கு எதிராக ஜெயலலிதா வழக்குத்தாக்கல்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டிக்கு எதிராக தாக்கல் செய்த ரிட்மனுவை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சிவராஜ் பாட்டேல் நேற்று டிவிஷன பெஞ்சிற்கு மாற்றினார்

குறிப்பிட்ட வழக்கில்கணிசமான அளவு சட்ட அம்சங்கள் இடம் பெற்றிருப்பதால் டிவிஷன்பெஞ்சின் விசாரணைக்காக முதலில் தலைமை நீதிபதியிடம் வழக்கு ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு தாம் உத்தரவிட்டதாகவும் தெரிவித்தார்.

தம்மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச் சாட்டுத் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்ய டாக்டர் சுப்பிரமணியசுவாமிக்கு அனுமதியளித்தமை தொடர்பாக தமிழக ஆளுநர் சென்னாரெட்டிக்கு எதிராக முதல்வர் ஜெயலலிதா மேற்படி வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். -க

### ஷார்ஜா கிரிக்கெட் இலங்கை வெற்றி

[ஷார்ஜா]

ஷார்ஜா வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை. பங்களாதேஷை 107 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 233, ஓட்டங்களை பெற்றது. கப்டன் அர்ச்சுன ரணதுங்கா-81, ஜெயசூரியா - 51, ஹசான் திலகரட்ண-37, அரவிந்த டி சில்வா-36 ஓட்டங்களைப் பெற்றனர்.

பங்களாதேஷ் அணி 28 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 126 ஓட்டங்களைப் பெற்றது. [வி-இ[

### உள்ளூராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குப் பின்போடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த அரசு தீர்மானித்திருக்கிறது. இதற்கமையவே இந்தத் தேர்தல்கள் மூன்று மாத காலத்துக்குப் பின் போடப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளது. இ

பயங்கரவாதச்சட்டத்தின் கீழ்

# பாதுகாப்புபடை கைதுசெய்த அரசு ஊழியர்க்கு மீண்டும் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு வழங்கப்படும் அத்துடன் அவர்களுக்குச் சம்பள நிலுவைகளை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என 'தினமின' சிங்களப்பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டில் பாதுகாப்பு குறித்து பயங்கரவாத தடுப்புச் சட்டததின்கீழ் கைது செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். அவர்களுக்கான சம்பள நிலுவையும் வழங்கப்படும்.

கைது செய்யப்பட்ட காலத்தில் அவர்கள் கடமைக்குச சமுகமளிக்க முடியாதிருந்த காலத்தைச் சம்பளத்துடன் கூடிய விடுமுறையாகச் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கவும் அரசு முடிவு செய்திருப்பதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது -இ

### ஒப்பந்தத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் மூலம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அசம்பாவிதங்களை தவிர்த்துக்கொண்டமை மகிழ்ச்சிக்குரியது.

கண்காணிப்புக் குழுக்களை நிறுவதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றார். ம-இ

### மோதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு கூறினர்,

அவர் இதுபற்றி கூறியதாவது: இனப் பிரச்னைக்கு தீர்வுகாணும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இதேவேளையில் அரசியல்தீர்வு ஒன்றை எட்டுவதற்கு வடக்கு கிழக்கில் அமைதி பேணுவது அவசியமாகும்'' என்றார். ம-இ

### பாதுகாப்பு

(1ம்பககத தொடர்ச்சி)

பேரணியையும் கொழும்புக்கு வெளியே நடாத்த முடிவு செய்தது. இதற்கென மலையகததின் தலைநகரான கண்டியில் மேதினத்தைக் கொண்டாடவும் ஐ. தே. க. முடிவு செய்தது.

எதிாக்கட்சியினரின் இந்த மேதினக் கூட்டத்தையும் பேரணியையும் முறியடிப்பதே அரசின் நோக்கமாக இருக்கிறதென்று தடைஉத்தரவு குறித்து ஐ. தே, க. கண்டனம் தெரிவிததுள்ளது.

இந்தத் தடை விதிப்பு குறித்து சட்சி மேற்கொள்ளவுள்ளநடவடிக்கை குறித்து ஆராய ஐ. தே,க. வின நிர்வாகக்குழு கூட்டம் நேற்றிரவு அவசரமாகக் கூடியதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. -இ

# 'ஜெ'க்கு எதிராக மதுரையில் போராட்டம்

(சென்னை)

மதுரையில் எதிர்வரும் 21ம் திகதி ஜெயலலிதா அரசை பதவி விலகக் கோரி போராட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

தி. மு. க. தலைமையிலான கூட்டம் ஒன்றில் ஜனதா தளம், எம்.ஜி.ஆர். அ. தி. மு.க. பாட்டாளி மக்கள், கட்சி, பார்வட் புளொக் இந்தியதேசியமுன்னனி ஆகிய காங்கிரசைத் தவிர்ந்த அனைத்து எதிர்க்கட்சிகள் யாவும் இதற்கான முடிவை எடுத்துள்ளன என்று அறியப்படுகிறது.

லஞ்ச ஊழல், முறைகேடான நடவடிக்கையில் அ. தி. மு க. ஈடுபட்டதால். ஜெயலலிதா அரசுக்கு எதிராக சுப்பிரமணிய சுவாமி வழக்குத் தொடரலாம் என்ற ஆளுநர் சென்னா ரெட்டியின் அறிவிக்குப் பின்பே எதிர்க் கட்சிகள் இந்தப் போர்க் கோலம் பூண்டுள்ளனவாம். ம-இ

# மோதல் தவிர்ப்பு ஒப்பந்த பாராட்டுக்குரியது

[கொழும்பு]

ரணில் புகழாரம்

மோதல தவிர்ப்புஒப்பந்தம் நல்லமுறையில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை நாம் பாராட்டுகிறோம் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுநாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய போது கூறினார்.

அவர்தமதுஉரையில்மேலும் கூறியதாவது:

ஐக்கிய தேசியக்கட்சி எவரையும் சுதந்திரமாக பொதுக் கூட்டங்களை நடத்த அனுமதி அளித்தது. இன்று சுமுகமான சூழல் இருக்கும்போதும் கூட பொதுக்கூட்டங்களை நிகழ்த்த எமக்கு அனுமதி கிட்டுவதில்லை.

நாம் பதவியில் இருந்தபோது பத்திரிகைச் சுதத்திரத்தைப் பறித்தோம் எனக் கூறினீர்கள் இப்போது நீங்கள் செய்வது என்ன? பொதுக்கூட்டங்களையும் மட்டுப்படுத்த முனைகிறீர்கள் என்றார். இ

### அவசரகால நிலை நீடிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியிலும் மற்றும் நாட்டின் பல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அவசரகால சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று 32 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. -இ

### பேச்சுக்களை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிக்க நடவடிக்கை எடுக்கும் படியும் மேற்படி மன்றம் மேலும் கேட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து இந்த மன்றத்தின் பொதுச்செயலர். விடுத்த அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

இனப்பிரச்னை காரணமாக வடபகுதி மக்கள் பெருந்துன்பங்களுக்கு உள்ளாயிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த அரசு மேற்கொண்ட முயற்சிகளை உலகத் திருச்சபை மன்றம் பாராட்டியுள்ளது. -இ

### காலிமுகத்திடலில்

(1ம பககத் தொடர்ச்சி)

அவசரகாலநிலை நீடிப்பு சம்பந்தமான விவாதத்தை முடித்து வைத்துப்பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவுத்தார்.

இதேவேளை கண்டியில் நடைபெறவிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு பொலிசார் தடைவிதித்திருப்பது குறித்து எதிாக்கட்கித் தலைவர் நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி ஒனறை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதி அமைச்சர் மேலும் கூறியதாவது:

கண்டியில் மேதினக் கூட்டத்தையும் பேரணியையும் நடத்த ஐ.தே.க. பொலிசாரிடம் அனுமதி கோரியுள்ளது.

பொதுக்கூட்டத்தை மட்டும் நடத்துவதானல் பொலிசார் அனுமதி வழங்குவர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஹட்டனில் மேதின ஊர்வலத்தையும் கூட்டத்தையும் நடத்த கடந்த வருடம் போன்று இவ்வருடமும் பொலிஸ் அனுமதி வழங்கும்.

ஐ. தே. க. வழமைபோல் கொழும்பு காலிமுகத்திடலில் மேதினக் கூட்டத்தை நடத்துவதில் பொலிசாருக்கு எதுவித ஆட்சேபனையும் கிடையாது எனக் கூறினார். இ

### பிரபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரம பேரேரா நேற்று நாடாளுமன்றத்தில் பேசிய போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

வடக்கிலும் - கிழக்கிலும் இளைஞர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்படுகின்றனர். சமாதானப்பேச்சுவார்த்தைகளை அவர்கள் விரும்புவாகளேயானல் இவ்வாறன நடவடிக்கைகளை அவர்கள் ஏன் மேற்கொள்ள வேண்டும் எனக் கேள்வி எழுப்பினர் திரு. காமினி ஜயவிக்கிரம பெரேரா.

இவர் பேசும்போது பேச்சினிடையே அடிக்கடி குறுக்கீடுகளில் ஈடுபட்ட திரு. வாசுதேவ நாணயக்காரா ''பிழையான தகவல்களைத் தர முயல வேண்டாம்'' என்று கூறினர். -இ

### சமாதானத்துக்காக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளனர்.

பொதுசன ஐக்கியமுன்னணியின் இரத்தினபுரி மாவட்டப்பிரதிநிதி வாசுதேவ நாணயக்காரா நேற்று நாடாளுமன்றதில் இவ்வாறு கூறினர்.

அவசரகா நிலை நீடிப்பு தொடர்பான பிரேரணை மீது தொடர்ந்து பேசிய அவர் மேலும் கூறியதாவது.

சமாதானத்துக்காக போலிக்குரல் எழுப்பும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தாம் பதவியிலிருக்கும்போது சமாதானத்துக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேறகொள்ளவில்லை

யுத்தம வேண்டாம் என்ற நோக்கத்தைக் கருத்திற்கொண்டுதான் பொதுமக்கள் இந்த அரசாங்கத்தினை பதவியில் அமர்த்தினர்.

அதனைக் கருத்திற் கொண்டே அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன் கொண்டு செல்கின்றது.

அவசரகாலநிலையை நீடிம்பதனல் மட்டும் நாட்டில் அமைதியைப் பேணிவிடமுடியாது என்றார். இ

### புலிகளும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. ஆயிரக்கணக்கான தொன் எடையுள்ள குண்டுகளைப் போட்டும் கூட தமிழ் மக்களின் போராட்டத்தை தோற்கடிக்கமுடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் சிறுவர்களுக்கான சட்டதிட்டங்கள் ஒழுங்கு முறைகள் என்பன தென்பகுதியில் உள்ளதை விட சிறப்பானதாக உள்ளன. க-இ

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Liecence number B/1633613.